# <u>பத்திரிக்கை செய்தி</u>

சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்ற மக்களின் விருப்பத்திற்கிணங்க, 01.10.2007 அன்று அரசியல் கட்சிகள் அறிவித்துள்ள கடையடைப்பின் போது, மக்களின் அன்றாட வாழ்க்கை, போக்குவரத்து மற்றும் சட்டம் ஒழுங்கு ஆகியவை பாதிக்கப்படமாட்டாது என்று அரசு உறுதியளிக்கிறது. பொதுமக்களுக்கோ மற்றும் பொதுச் சொத்திற்கோ பங்கம் விளைவிக்கும் வண்ணம் வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். எல்லாத் தரப்பினரும் அமைதிகாத்திட வேண்டுமென அரசு கேட்டுக்கொள்கிறது. கடையடைப்பு தினத்தன்று சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க மாவட்ட நிர்வாகத்திற்கும் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கும் தக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவைகளின் விவரங்கள் பின்வருவன:-

- ❖ அத்தியாவசியத் தேவைகளான தொலைபேசி மற்றும் தொலை தொடர்பு, குடிநீர் வழங்கல், பால் வினியோகம், மின் வினியோகம், செய்தித்தாள் வினியோகம், மருத்துவமனைகள், தீயணைப்புத் துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் தகுந்த பாதுகாப்புடன் பராமரிக்கப்பட வேண்டும்
- ❖ முக்கிய கட்டமைப்புகளான, மின் நிலையங்கள், துணை மின் நிலையங்கள், அரசு கட்டிடங்கள், தகவல் தொடர்பு நிலையங்கள், பாலங்கள், எண்ணெய் கிடங்குகள் மற்றும் இரயில்வே மேம்பாலங்கள் ஆகியவற்றிற்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும்
- ❖ வெளிப்படையான ரோந்து பணிகளை உடனே ஏற்பாடு செய்ய வேண்டும்
- ❖ பால் மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களை தடையில்லாமல் வினியோகிக்க நடவடிகை எடுக்க வேண்டும்
- ❖ உயர்நீதிமன்றம் மற்றும் இதர நீதிமன்றங்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும்
- ❖ சமுக விரோதிகள், வன்முறை மற்றும் நாசவேலையில் ஈடுபடுவோர் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்
- ❖ நகரங்களில் காவல் துறையினர் பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட வேண்டும்.

- இரயில் நிலையங்கள், பேருந்து பணிமனைகள், முக்கிய சாலைகள், முக்கிய சந்திப்புகள், மருத்துவமனைகள், நீதிமன்றங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் ஆகியவைகளுக்கு காவல் துறையினர் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

- சந்தைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு தகுத்த பாதுகாப்பு அளிக்க வேண்டும்

- சம்பவங்கள் நடக்கும் பொழுது சரியான நேரத்தில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கும் வகையில், அனைத்து காவல் துறை கட்டுப்பாட்டறைகளும் தகுந்த முன்னேற்பாடுகளுடன் இருக்க வேண்டும்.

- வேலைநிறுத்தம் அமைதியாக நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்

***